இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

ஆண்டவர் ஆபிராமை நோக்கி, “உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன்; உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன்; உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்” என்றார். (தொ.நூ. 12: 1-4a )

# பொதுநிலையினர் திருஅவையில் விருந்தினர்கள் அல்ல



**வத்திக்கான்:** திருஅவை என்பது அருள் பணியாளர்களும் பொதுநிலையினரும் இணைந்து பராமரிக்க வேண்டிய ஒரு இல்லம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த சனிக்கிழமை, பிப். 18 அன்று தெரிவித்தார்.

அன்று வத்திக்கானின் புதிய சினோட் மண்டபத்தில், "உலக திருஅவை வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும், அருள்பணி யாளர்களும் பொதுநிலையினரும் ஒன்றாக இணைந்து பயணிக்க வேண்டிய காலம் இது" என்று அவர் தெளிவு படுத் தினார்.

"பொதுநிலையினர் திருஅவையில் 'விருந் தினர்கள்' அல்ல மாறாக, அவர்களது சொந்த இல்லம்தான் திருஅவை. எனவே அவர்கள் தங்கள் சொந்த வீட்டைக் கவனித்துக் கொள்ள அழைக்கப்படு கிறார்கள்," என்று அவர் கூறினார். "பொதுநிலையினர், குறிப்பாக பெண்கள், அவர்களின் மனித மற்றும் ஆன்மீக திறன்கள் மற்றும் பங்குகள், மறை மாவட்டங்களின் செயல்பாட்டுக்கான கொடைகளில் அதிக மதிக்கத்தக்கவர் களாக இருக்க வேண்டும்."

திருஅவை பணியில் அருள்பணியாளர் களும் பொதுநிலையினரும் எவ்வாறு சிறப்பாக இணைந்து பணியாற்றலாம் என்பது குறித்து கடந்த மாதம் 16-18 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றவர்களிடம் திருத்தந்தையின் உரை வாசிக்கப்பட்டது. .

"அருள்பணியாளர்களுடன் சேர்ந்து, பொதுநிலையினர் மதச்சார்பற்ற சூழலில் ‘வேலை, பண்பாடு, அரசியல், கலை, சமூக தொடர்பு" போன்றவற்றில் திருஅவையிலும் உலகத்திலும் கிறிஸ்தவ சாட்சியம் அளிக்க வேண்டும்: என்று திருத்தந்தை மேலும் கூறினார்.



*பிப்ரவரி 16-18 வரை நடைபெற்ற கருத்தரங்கு கூட்டத்தில் பங்கேற்றவர்களுடன் திருத்தந்தை*

திருஅவையின் வாழ்க்கையில் பொதுநிலை யினர் பங்கேற்கக்கூடிய சில சிறப்பு பணிகளை அவர் பட்டியலிட்டார்: அவற்றுள் சில குறிப்பிட்ட மறையுரை களாற்றுதல், சிறுவர்கள், இளைஞர்கள், குருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஆகியோருக்கான உருவாக்கப் பயிற்சி களில் அருள்பணியாளர்களுடன் இணைந்து ஒத்துழைத்தல், ஆன்மீக வழிகாட்டல், தம்பதிகளைத் திருமணத்திற்கு தயார் செய்தல் மற்றும் திருமணமான தம்பதி களுடன் பயணித்தல் போன்ற பணிகளை மேற்கோள்காட்டினார். "ஒவ்வொரு சமூக நிலையிலும் குறிப்பாக உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய நிலையில் புதிய மேய்ப்புபணி திட்டங்கள் தயாரிக்கப்படும் வேளையில் பொதுநிலையினர் எப்போதும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

"இதனால்தான், குருத்துவ மாணவர்கள் கல்லூரியில் பயிலும் காலத்தில் பொதுநிலையினருடன் அன்றாட மற்றும் சாதாரண இயல்பு பணிகளில் ஒன்றித்து செயல்பட பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றும், இதன்வழியாக சமூகத்துடன் ஒன்றித்து வாழும் இயல்பு வாழ்க்கைமுறை அவர்களில் துளிர்விடும் என்றார். இத்தகைய ஒன்றித்த மேய்ப்புபணி பயிற்சிகள் வாழ்வு ஒரு சிறப்பு நிகழ்வாக அல்லாமல் சாதாரண மற்றும் இயல்பானதொன்றாக வெளிப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார்.

"ஓர் அருள்பணியாளரிடம் காணப்படக் கூடிய மோசமான விடயங்களில் ஒன்று, அவர் யாரிடமிருந்து, எங்கிருந்து வந்தவர் என்ற பின்னணியை நினைத்துப் பார்க்காமலும் அதனை மறந்தும் வாழ்வ தாகும் என்று அவர் தொடர்ந்தார். இத்தகையோருக்கு "நினைவில் கொள் ளுங்கள்" என்று மீண்டும் மீண்டும் ஒலிக்கும் மறைநூல் வார்த்தையை எடுத்துரைக்கலாம். 'நீங்கள் எங்கிருந்து அழைத்துச் செல்லப்பட்டீர்கள், எந்த மந்தைக்கு பணியாற்ற தேர்வுச் செய்யப் பட்டீர்கள் என்பதை நினைவில் வையுங்கள், உங்கள் பின்னணியை நினைவில் வையுங்கள்' (2 தீமோ. அதி 1)." எனும் ஆழ்ந்த படிப்பினையை அவரது உரையின் மையமாக வைத்து உரையை முடித்தார் திருத்தந்தை.

*தமிழாக்கம் –ஆர்.கே.*

# துருக்கியைச் சென்றடைந்தன வத்திக்கான் உதவிப்பொருள்கள்

**வத்திக்கான்:** துருக்கி மற்றும் சிரியாவில் 45,000-க்கும் அதிகமான உயிர்களைக் பறித்த நிலநடுக்கங்களால் பாதிக்கப் பட்டவர்களைத் திருத்தந்தையின் பிறரன்பு உதவிகள் சென்றடைந்துள்ளன என்று வத்திக்கான் செய்திக்குக் கூறியுள்ளார் திருத்தந்தையின் பிறரன்புப் பணிகளுக்குப் பொறுப்பான கர்தினால் Konrad Krajew-ski

கடந்த பிப்ரவரி 16, வியாழனன்று, துருக்கிய தூதர் Ufuk Ulutaş அவர்களைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சந்தித்த போது, நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள துருக்கி மக்களோடு தான் மிகவும் நெருக்கமாக இருப்பதாகவும், அவர்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்ற திருப்பீடம் தயாராக இருப்பதாகவும் கூறியிருந்தார்.



இதன் தொடர்ச்சியாக, துருக்கி மக்களுக்கு உதவும்பொருட்டு திருப்பீட பிறரன்பு அமைப்பை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டதன் விளை வாக, துருக்கிய தூதரை தான் சந்தித்ததாகவும், அதனைத் தொடர்ந்து இத்தகைய முயற்சிகளை எடுத்து அந்நாட் டிற்கு உதவியுள்ளதாகவும் கூறியுள்ளார் கர்தினால் Krajewski,

நற்செய்தி, எப்போதும் 'இன்று' என்று சொல்கிறது, 'நாளை' அல்ல. இயேசு அருளடையாளங்களைச் செய்தபோது, உடனடியாகச் செய்தார். ஒரு வாரத்திலோ கொஞ்ச நேரத்திலோ செய்வதாகச் சொல்லவில்லை என்றும், அவ்வாறே நிலநடுக்கங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சென்று சேரவேண்டிய உதவிகள் உடனடியாக அனுப்பப்பட் டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார் கர்தினால் Krajewski.

அத்தோடு, துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கம், உக்ரைன் போர் மற்றும் நியூசிலாந்தில் பேரழிவை ஏற்படுத்திய சூறாவளி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்

# ‘அடுத்திருப்போரில் ஆண்டவரை அன்பு செய்’

‘கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதரர் சகோதரிகளை வெறுப்போர் பொய்யர். தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது’ (1 யோவா 4:20) என்ற இறைவார்த்தைப் பகுதியை நாம் ஆழ்ந்து வாசித்தால், கடவுள் அன்புக்கு நிபந்தனையாக பிறர் அன்பை முன்னிலைப் படுத்துகிறது புதிய ஏற்பாடு.

இயேசுவும், இணைச்சட்டம் 6:5-ல், ‘முழு இதயத்தோடும், உன் முழு உள்ளத் தோடும், உன் முழு ஆற்றலோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக!’ என்றுள்ளதையும், லேவி 19:11-12-ல், ‘களவு செய்யாமலும், பொய் சொல்லாமலும் ஒருவரை ஒருவர் வஞ்சியா மலும், என் பெயரால் பொய்யாணையிட்டு, உங்கள் கடவுளின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தாமலும் இருங்கள்’ என்பதை மையப்படுத்தியும் அவரது படிப்பினையை வலியுறுத்தியிருக்க வேண்டும். இயேசு, பிறர் அன்பு வழிதான் கடவுள் அன்பு சாத்தியம் என்பதை உறுதியாக போதித் தார். எடுத்துக்காட்டாக மத்தேயு 25:31-46 வரை உள்ள பகுதியில், ஆணித்தரமாக, ‘‘மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்’ இறுதி தீர்ப்பில் அவரது தீர்ப்புக்கு அளவுகோளாகக் கூறுகிறார்.

இங்கே ஒன்றை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். கடவுளையும் மனிதரையும் தனித்தனியாக அன்பு செய்ய வேண்டும் என்ற பொருளில் இயேசு போதிக்க வில்லை. பல சந்தர்ப்பங்களில் நாம் அப்படிதான் புரிந்துகொள்கிறொம் மாறாக, ‘அடுத்திருப்பவரில் ஆண்டவரை அன்பு செய்’ என்பதுதான் சரியான புரிதல். துன்புறும் அடுத்திருப்பவரை கண்டுகொள் ளாமல் கடவுளுக்கு ஓடியாடி, இரவும் பகலுமாக பணி செய்வதில் பயனிருப்பதாக தெரியவில்லை. மாறாக, பிறரன்புதான் இறையன்புக்கு அறிமுகமாக உள்ளது.

இன்றைய பிரச்சனை என்னவெனில், நம்மில் பலருக்கு அடுத்திருப்போரில் ஆண்டவரைக் காண்பதற்கு தடைகளாக பல உள்ளன, அவற்றுள் மிக முக்கிமானது நாம் காலம் காலமாக கொண்டிருக்கும் மரபு ஆன்மீகம்.

மரபு ஆன்மீகம் என்று கூறும்போது, கடவுள் என்றும் எப்போதும் ஆலயத்தில் தான் உள்ளார் என்று அங்கே அவரை வழிபட முனைவது. முதலில் நம்மில் குடிகொண்டிருக்கும் கடவுளை முன்னறிய வேண்டும். என்னில் கடவுள் குடிகொண்டுள்ளார் என்று உணர்வோர் தான் அடுத்திருப்பவரிலும் கடவுள் உள்ளார் என்பதை ஏற்பார். அடுத்தவரிலும் கடவுள் உள்ளார் என்பதை முழுமையாக நம்புவோர்தான் அவர் துன்பறும்போது அவரில் வாழும் கடவுள் துன்புறுவதாக எண்ணி உதவிட முன்வருவார்.

இயேசுவின் முன்னோடியாக திகழ்ந்தவர் திருமுழுக்கு யோவான். ஆனாலும், இயேசு அவரைப்போல் பாலைநிலப்பகுதிகளில் மறைந்து தனித்து வாழவில்லை. அவர் நலிந்தோரை, ஏழை எளியோரை, ஒடுக்கப்பட்டோரை, சிதைக்கப்பட்டோரை தேடி ஊர் ஊராகச் சென்றார். சடங்கு சம்பிரதாயங்களில் அல்ல, தீட்டு என்று ஒதுக்கபப்பட்டதை ஏற்று, பாவிகளோடு அமர்ந்து உறவாடுவதை முதன்மையாகக் கொண்டார்.

ஆலயத்திற்கு தவறாமல் சென்று வழிபடுவதில் ‘நான் மட்டும் மீட்படைய வேண்டும் என்ற தன்னலம் மேலோங்கி இருப்பதை அறிகிறோம். ஆலயம் செல்வது தவறு என்ற பொருளில் அல்ல, அதற்கு முன்பாக பொதுநலம் நம்மில் மேலோங்க வேண்டும் என்ற கருத்தோட்டதில் நமது கிறிஸ்தவ வாழ்வு அடங்க வேண்டும்.

அடுத்திருப்போருக்கான அன்பு பணிகளே கடவுளுக்கான தலைசிறந்த அன்பு. நல்ல சமாரியர் உவமையில் ‘எனக்கு அடுத்திருப்பவர் யார்?’ என்று ஒருவன் கேட்க, அவனுக்கு உடனடியாக பதில் கூறாமல், அவ்வுமையில் ‘அடிப்பட்ட வனுக்கு அடுத்திருப்பவர் யார்? என்று கேள்வி மாற்றிப்போடுகிறார் இயேசு.

ஆம், இத்தவக்காலப் பயணத்தில் நோன்பு இருந்தல், சிலுவைப் பாதை போன்ற பக்தி முயற்சிகள் யாவும், நமக்கு அடுத்திருப் பவரின் நலனில் நாம் அக்கறைகொள்ளும் மனிதர்களாக நம்மை உருமாற்ற வேண்டும்.

-ஆர்.கே.

# கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மறைக்கல்வி மையத்தில் மறைக்கல்வி உருவாக்கப்பயிற்சி நடைபெற்றது

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் மறைக்கல்வி மையம், புதிய மறைக்கல்வி ஆசிரியர்களுக்கென மறைக்கல்வி உருவாக்கப்பயிற்சி ஒன்றை கடந்த பிப்ரவரி மாதம் 7-9 ஆகிய தினங்களில் நடத்தியது. இயங்கலை வழியாக நடத்தப்பட்ட இப்பியற்சியில் பல பங்குகளிலிருந்து மறைக்கல்வி ஆசிரியர் கள் ஆர்வத்தோடு பங்குபெற்றனர்.

இப்பயிற்சியில், மறைக்கல்வி ஆசிரியர் என்பது இறைஅழைத்தல் என்பதும், சிறுவர்களுக்கும் இளையோருக்கும் மறைக்கல்வி பயிற்றுவிப்பதில் அவர்களுக்கு இருக்கும் திறனை அங்கீகரிப்பதும், அவர்களின் நம்பிக்கையை ஆழப்படுத்துவ தும், திருமுழுக்கின் வழி நற்செய்தி அறிவித்தல் பணிக்கு அர்ப்பணித்தலும் இப்பயிற்சியின் தூர நோக்கு சிந்தனையாக கொள்ளப்பட்டது.

மேலும், கிறிஸ்தவ ஆனமீகத்தைப் புரிந்து கொள்ளுதல், கத்தோலிக்க திருஅவையின் படிப்பினைக்கு ஏற்ப வாழ்தல், ஆன்ம உணவூட்டும் வழிமுறையை அறிதல், வாழ்வளிக்கும் நம்பிக்கையில் வளர்தல், பிறரோடு நம்பிக்கை வாழ்வைப் பகிர்தல் போன்ற ஆன்மீகத்தை ஆயந்தறிதலும் அப்பயிற்சியின் குறிக்கோள்களாக ஏற்கப் பட்டது.

சகோதரி மாணிக்கம் சின்னப்பன் மற்றும் அருட்சகோதரி ரீத்தா சவரியண்ணன் ஆகியோரால் வழிநடத்தப்பட்ட இப்பயிற் சியில் பங்கேற்ற ஒரு மறைக்கல்வி ஆசிரியர் அவரது அனுபவத்தை பின்வரு மாறு பகிர்ந்துகொண்டார்.

“கத்தோலிக்க திருஅவையின் கத்தோலிக்க மறைக்கல்வி நூலின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ள இந்த உருவாக்கப்பயிற்சி எனக்கு உதவியது. அத்தோடு இந்நூலின் உள்ளடக்கங்களை அறிவதற்கும் புரிந்து கொள்வதற்கும் எனக்கு இப்பயிற்சி ஒரு சவாலாகவும் இருந்தது. குழந்தைகளுக்கு வழிகாட்டுவதில், கத்தோலிக்க திருஅவை யின் பாரம்பரியத்தை அங்கீகரிக்கும் அதே வேளையில் எனது சொந்த நம்பிக்கையை நன்கு கடைப்பிடிக்க எனக்கு சவால் விடுவதாகவும் அறிந்துகொண்டேன். என் சிலுவையைச் சுமக்காமல், நான் ஒரு நல்ல பணியாளனாகவோ அல்லது இயேசுவைப் பின்பற்றுகிறவனாகவோ இருக்க முடியாது என்பதைத் தெள்ளத்தெளிவாக அறிந்து கொண்டேன். எனது மறைக்கல்வி ஆசிரியர் பணி சிறப்பாகத் தொடரும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு



என்று பெருமிதம் கொள்கிறேன்” என்றார் கோலாலம்பூர், ஈப்போ சாலையில் உள்ள உயிர்த்த ஆண்டவர் பங்கைச் சேர்ந்த சகோதரி சந்தனா சின்னப்பன்.

## திருத்தந்தை தலைமைத்துவத்தின் பத்தாமாண்டு நிறைவிற்காக தபால்தலை வெளியீடு

வருகின்ற மார்ச் 13 ஆம் தேதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தலைமைத்துவப் பொறுப்பேற்று பத்தாண் டுகள் நிறைவுறுவதை சிறப்பிக்கும் வகையில் வத்திக்கானால் நான்கு முக்கிய நிகழ்வுகளை அடையாளப்படுத்தும் விதமாக தபால் தலைகள் வெளியிடப்பட உள்ளன.




# மனம்மாறினால் நாமும் இறைமைந்தரே!

இன்று தவக்காலத்தின் 2-ம் ஞாயிறுவில் இணைகிறோம். கடந்த வார பாலைநிலப் பாசறையிலிருந்து மலைப்பாங்கான உல்லாசத் தலத்திற்கு இவ்வாரம் நாம் அழைத்துச் செயல்படுகிறோம். தவக்காலத் தின் முதலாம் ஞாயிற்றுக்கிழமை நற்செய்தியில், இயேசு பாலைநிலத்தில் சோதிக்கப்படுவது பற்றி வாசிப்போம். இன்று தாபோர் மலையில் இயேசு உருமாற்றம் காண்பது பற்றி வாசிக்கிறோம். இந்த தோற்றமாற்றம் நிகழ்வின் போது மூன்று சீடர்கள் (பேதுரு, யாக்கோபு, யோவான்) உடன் இருந்தார்கள். இவர்கள் மூவரும் இயேசுக்கு நெருக்கமானவர்கள். இயேசு தாம் யார் என்பதை இம்மூவருக்கும் வெளிப்படுத்துகிறார்.

ஒருவரை நன்கு புரிந்து அறிந்து கொள் வதற்கு சில காலம் பிடிக்கும். அவரோடு எவ்வளவு காலம் பழகுகிறோம் என்பதைப் பொறுத்துள்ளது. அவ்வாறே இயேசுவைப் பற்றி புரிந்து அறிந்து கொள்ள காலம் பிடித்தது. அந்த மலையின் மீது இயேசு தோற்றமாறி தமது இறைத்தன்மையை வெளிப்படுத்தியப் போது அவர்கள் அவரை இன்னும் ஆழமாக அறிந்து கொண்டனர். சீடர்கள் வாழ்க்கையில் தொடர்ந்து நடந்த நிகழ்வுகள் இயேசுவை நன்கு அறிந்து, திருத்தூதர்களாகச் செயல்படத் துணிவு அளித்தது. இயேசுவின் இறைத்தன்மையைக் கண்ட அவர்களும் பின்னர், இயேசு தொடங்கிய திருஅவைக்காக தங்களது உயிரையும் துச்சமாக எண்ணி உழைத் தனர்.

நாமும் படிப்படியாக அவரது அன்பிலும் இரக்கத்திலும் வளர்ந்து, இயேசு கிறிஸ்து நமது மீட்பர் என்ற புரிந்துணர்வைப் பெற வேண்டும். நமது உள்ளத்தையும் கண்களையும் மறைக்கும் இருளை அகற்ற, தாபோர் மலையில் வீசிய ஒளி நம்மை ஆட்கொள்ள வேண்டும். திருத்தூதர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோர் கண்ட தோற்றமாற்றம் நம்மிலும் நிகழ வேண்டும் என்பதே தவக்காலத்தின் நோக்கம். தாபோர் மலையில் கிறிஸ்துவின் ஒளியில் நின்ற அவர்களின் வாழ்வு மாறியது! இயேசு கிறிஸ்து நமது மீடபர் என்பதை மனத்திற் கொண்டு, நமது வாழ்வை மறு ஆய்வு செய்வோம். நமக்குத் தூய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கூறுகிறார். “நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன் மூலம் இப்போது அருள் வெளிப்பட்டுள்ளது” (2திமொ.1:10) என்று திருஅவையை உலகெங்கும் கொண்டு சென்ற பவுல் அடியார் எடுத்துரைக்கிறார்.

காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத் தின்படி, ஆபிரகாமும் அழைக்கப்பட்டார் என முதலாம் வாசகம் குறிப்பிடுகிறது (தொநூ.12:1). அவரும் சொந்த ஊரை விட்டு, ஆண்டவர் காட்டும் ஊருக்குக் குடிபெயர்ந்தார். அது ஆபிரகாம் காலத்து தோற்றமாற்றம்.

இன்றைய நற்செய்தியில் இடம்பெறுகின்ற இயேசுவின் தோற்றமாற்ற நிகழ்விற்கு முன்பாக, இயேசு தன்னுடைய பாடுகளை முன்னறிவிப்பார். அப்பொழுது பேதுரு, “ஆண்டவரே, இது வேண்டாம்” என்பார். உடனே இயேசு அவரைப் பார்த்து, “என் கண்முன் நில்லாதே சாத்தானே... நீ கடவுளுக்கு ஏற்றவை பற்றி எண்ணாமல், மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்” என்பார். ஆம், பேதுருவைப் போன்று மனிதருக்கு ஏற்றவை பற்றி எண்ணி, மனித விருப்பத்தின்படி அல்லது தன்னுடைய விருப்பத்தின் செயல்படுகின்ற எவரும் கடவுளின் மைந்தராக முடியாது.

*-அந்தோணி இன்னாசி, ஸ்ரீ கெம்பாஙான், செர்டாங்*

### தவக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | தோ.நூ. **12: 1-4a** |
| தி. பாடல் | 33: 4-5. 18-19. 20,22 |
| வாசகம்: | 2 திமோ 1: 8b-10 |
| நற்செய்தி: | மத் : 17: 1-9 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 1

**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**

**திருப்புகழ் மாலை- வாரம் 2**